# அமரர் விவேகானந்தன்

கடந்த 09.05.2019 அமரத்துவம் அடைந்த எனது நண்பரும்,சக ஊழியரும் எனது குடும்பத்தின் நட்பிற்கும் அன்பிற்கும் ,பாசத்திற்கும் உரியவரான அமரர் விவேகானந்தன் அவர்களைப் பற்றி ஒரு சிறிய செய்தியை அனுப்பி வைக்குமாறு அவரது மகனான **Raju** என்பவர் என்னை வேண்டி கொண்டதற்கு இணங்க பின்வரும் தகவல்களை அவரது ஆத்ம திருப்திக்காக தெரிவிப்பதில் நானும் மிக்க ஆத்ம திருப்தி கொள்கின்றேன்.

இவர் உடுப்பிட்டியைச் சேர்ந்தவர் மிகவும் அழகானவர்.முதற் காட்சியிலே உடுப்பிட்டியில் இவரைக் கண்ட போது நல்ல சுருண்ட தலைமுடியுடன் மிடுக்கான இளமைத் தோற்றத்துடன் கண்ட காட்சி இன்றும் நினைவில் இருக்கின்றது.1988ம் ஆண்டு என நினைக்கின்றேன் இவரது உடுப்பிட்டி வீட்டிற்கு பக்கத்திலே உள்ள ஒரு அரிசி ஆலையை குத்தகைக்கு எடுத்து நானும் எனது நண்பர் பாலசுப்ரமணியமும் நடாத்தி வந்தோம்.அப்பொழுது அயற்காணியாக இருந்த இவரது வீட்டில் இவரை சந்தித்த போது தான் இலங்கை வங்கியில் **Head office foreign department** ல் வேலை செய்வதாகவும் அயலூரான வல்வெட்டித்துறையிலிருந்து சிவரட்ணம் எனும் நபர் காசாளராக இலங்கை வங்கியில் இருப்பதாக தான் அறிந்ததாகவும் அது நான் தான் என்று அறிந்தவுடன் மிகவும் சந்தோசத்துடன் என்னை கட்டித்தழுவி தனது அன்பையும், பண்பையும் வெளிப்படுத்தனார்.

## வங்கியியல்

ஏதோ ஒரு காரணத்தால் இலங்கை வங்கி **Stanly** கிளையில் நான் முகாமையாளராக பணியாற்றிய பொழுது எனக்கு உதவியாளராக அமரர் விவேகானந்தன் பணியாற்றி வந்தார்.அவருடைய பண்புகளை பின்வருமாறு விபரிக்கலாம்.

1.உயர் பதவிகளை நாடி இவர் செல்வதில்லை ஆனால் தானாக வரும் பதவியை ஏற்க மறுத்ததில்லை.

2.எந்த ஒரு சக ஊழியருடனும் முரண்பட்டுச் செல்வதில்லை .நண்பனாக இருந்த போதும் முகாமையாளர் என்ற வகையிலே எந்த ஒரு ஊழியரைப் பற்றியும் குறை கூறுவதில்லை.

3.பல வாடிக்கையாளர்கள் என்னிடம் வந்து அமரர் விவேகானந்தர் அவர்கள் தங்களை இன்முகத்துடன் வரவேற்பதாகவும் பெரிய பிரச்சினைகளை இலகுவாக தீர்ப்பதாகவும் என்னிடம் கூறியுள்ளார்.

இந்த வகையிலே இலங்கை வங்கியின் கௌரவத்தையும், வாடிக்கையாளரின் தேவைகளையும் மேம்படுத்துவதில் இவரது பங்களிப்பை இலங்கை வங்கியின் முதிய உறுப்பினர் என்ற வகையிலேயே இன்னும் நான் சிரம் தாழ்த்தி கௌரவிக்கின்றேன்.

## குடும்ப உறவு

நாங்கள் எமது குடும்பத்துடன் யாழ்ப்பாணத்திலுள்ள கச்சேரி East Lane ஒரு பகுதியாகவுள்ள st annest lane பக்கத்து வீடுகளில் வசித்து வந்தோம்.அப்பொழுது பல மறக்க முடியாத நிகழ்வுகள் நடந்துள்ளன.அப்பொழுது அவரது இளைய மகளான சாரு அவரது நெருங்கிய வீட்டு யன்னலாலும் எமது கருத்துக்களைக் பரிமாற்றிக் கொள்வோம்.அதன் ஒரு அங்கமாக என்றும் மறக்க முடியாத "வேட்டைக்காரன் வேட்டைக்காரன்" என்ற பாடலை திரிவு படுத்தி "வீட்டுக்காரி வீட்டுக்காரி"என கூறி மகிழும் நிகழ்ச்சிகள் எனது நினைவில் ஓடிக் கொண்டிருக்கின்றன.

இவ்வாறு சமீபத்தில் அவரது மரணச் செய்தி கேட்டு என்னுடன் தங்களுடைய உணர்வுகளை பகிர்ந்து கொண்ட நண்பர்கள் ஏராளம் அவை யாவும் கூறிய கருத்துக்களில் பொதுவான சில கருத்துக்கள் வருமாறு,

1.எப்பொழுதும் யாவருடனும் இன்முகத்தோடு பழகுவார்.

2.இலங்கை வங்கியின் முன்னேற்றத்திற்காகவும் அதன் பெருமையை நிலைநாட்டுவதற்கும் முன்னின்று உழைத்தவர்.இது எந்த விதமான ஊழல் நடவடிக்கைகளிலும் ஈடுபடாத ஒரு புனிதமானவர்.

இவருடைய ஆத்மா சாந்தியடையும். இலங்கை வங்கியின் பெருமைக்குரியவருமான அமரர் விவேகானந்தரது மரணத்தில் பல வழிகளிலும் பங்கு கொண்ட அனைவருக்கும் இத்தருணத்தில் நன்றி கூறி அவருடைய ஆத்ம சாந்தியடைய வேண்டி ஏக்கத்துடன் விடை பெறும்

ந.சிவரட்ணம்

ஓய்வு நிலை உதவிப் பொதுமுகாமையாளர்

வடமாகாணம்

இலங்கை வங்கி